[1978 மார்ச் 21

இணைப்பு II.

[459-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]-

265—A. ஏனைய நிர்வாகம் பணிகள் என்னும் தலைப்பில் 11 ஆம் கோரிக்கைக்குரிய கொள்கை விளக்கக் குறிப்பு.

(1)" AC. ஹைதராபாத், இந்திய நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் சங்கத்திற்குத் தொகையளித்தல் "

குறிப்புரை :

ஹைதராபாத், இந்திய நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் சங்கத்தில் இம்மாநில அரசு சாதாரண உறுப்பினராக இருக்கிறது. அரசு, பல்வேறு நிலைகளிலுள்ள அதிகாரிகளை இந்நிறுவனம் நடத்தும் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெறுவதற்காக மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர் சந்தா ஆண்டொன்றுக்கு ரூ. 2,000. அதன்படி 1978-79-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) "AG. சென்னையில் நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தை அமைத்தல் " பற்றிய குறிப்பு:

வேளாண்மை, பாசனம், மின்சக்தி, போக்குவரத்து ஆகிய நிர்வாகத் துறைகளின் தேவையை நிறைவு செய்ய நிர்வாகப் பயிற்சி நிறுவனம் ஒன்றை சென்னையில் அமைப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இடைநிலைப்பட்ட அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் 12 பேர் பெங்களூர் இந்திய நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் 1975 டிசம்பர் முதல் 1977 டிசம்பர் வரை இரண்டாண்டு பயிற்சியை முடித்துள்ளனர். இவ்வதிகாரிகள் இந்த நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் பல்வேறு துறைகளுக்குத் தலைமைப் பொறுப்பேற்பர். இந்நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவேறும் தறுவாயில் உள்ளன.

'சம்பளங்கள்' 'அலுவலகச் செலவுகள்' என்னும் ஒவ்வொரு தலைப்பின்கீழும் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(iii) "AH. பவானிசாகரில் சிவில் பணிப் பயிற்சி நிறுவனம்" குறிப்புரை :

கோயம்புத்தூர் மாவட்டம், பவானிசாகரில் சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் ஒன்று 1975 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அதிகாரி பதவித் தரத்தில் ஒருவர்

இந்நிறுவனத்தின் முதல்வராக இருக்கிறார். இவருக்கடுத்தபடியாக ஆசிரியர் பொறுப்பில் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் 16 பேர் உள்ளனர். இவர்கள் தலைமைச் செயலகம், வருவாய்த் துறை கருவூலம், ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறைகளிலிருந்து வந்தவர்களாவர். உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரும் நிலைப் பணிக்கு அவசியமான பணியாளர்களும் இந்நிறுவனத்தில் உள்ளனர். இந்நிறுவனம் பின்வரும் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது :—

(1) நேரடியாகப் பணிக்கு எடுக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சிக்கால அளவு இரு திங்கள்—முழு நேரம்.

(2) வருவாய்த்துறை, வணிகத்துறை, கூட்டுறவுத்துறை முதலிய நிர்வாகத் துறைகளில் பணிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், பதவி உயர்வு அளிக்கப்படுபவர்களுக்கும் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளுக்கும் அடிப்படைப் பயிற்சி—பயிற்சிக்கால அளவு இரு திங்கள்—முழு நேரம்.

(3) வேளாண்மைத்துறை, கால்நடை வளர்ப்புத்துறை, கல்வித்துறை போன்ற சில துறைகளில் அரசிதழ் பதிவு பெற்ற பணிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், பதவி உயர்வு அளிக்கப்படுபவர்களுக்கும் அடிப்படைப் பயிற்சி—பயிற்சிக் கால அளவு மூன்று வாரங்கள்—முழு நேரம்.

(4) வணிகவரித்துறை போன்ற துறைகளிலுள்ள அதிகாரிகளுக்கு தனிப்பட்ட பயிற்சி வகுப்புகள்.

இப்பயிற்சிகள் யாவும் நிறுவனத்தில் தங்கியிருந்து பயிற்சி பெறும் பயிற்சிகளாகும்.

சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் 1975-ஆம் ஆண்டு அமைக்கப் பட்டதிலிருந்து 4,294 இளநிலை உதவியாளர்களுக்கும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் 158 பேருக்கும் அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது. வணிகத் துறைக்காக உள்ள தனிப்பயிற்சி வகுப்பில் 333 இளநிலை உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் பயிற்சிப் பிரிவு 1976-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதிஅன்று தொடங்கப்பட்டது

தற்போது 244 ஆடவரும் 93 மகளிரும் ஆக மொத்தம் 337 இளநிலை உதவியாளர்கள், அரசிதழ் பதிவு பெற்ற 17 அதிகாரிகள் ஆகியோர் பயிற்சி பெற்று வருகின்றனர். மேற்படி நிறுவனத்தை நடத்துவதற்காக 1978–79-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 3,97,000 ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

/1978 மார்ச் 21

பணியாளர் நிர்வாக சீர்திருத்த (பயிற்சித்) துறை.

''265—A. ஏனைய நிர்வாகப் பணிகள் என்னும் தலைப்பின்கீழ் 43-ஆம் எண் கோரிக்கைக்குரிய கொள்கை விளக்கக் குறிப்பு பயிற்சி நிறுவனங்கள்பற்றிய குறிப்பு :

புதுடில்லியிலுள்ள இந்திய பொது நிர்வாகக் கழகத்தில் இம் மாநில அரசு இணைக்கப்பட்ட உறுப்பினராக உள்ளது. அன்றியும், இந்திய பயிற்சி மேம்பாட்டுச் சங்கத்திலும் பயிற்சி நிறுவனச் சார்வு உறுப்பினராக இம்மாநில அரசு உள்ளது. புதுடில்லியிலுள்ள இந்திய பொது நிர்வாகக் கழகத்திலும், இந்தியப் பயிற்சி மேம்பாட்டுக் சங்கத்திலும் உறுப்பினராக இருப்பதற்கு ஒவ்வொன்றுக்கும் முறையே ரூபாய் 500, ரூபாய் 50 ஆண்டுக் கட்டணம் ஆகும். இந்த இரு நிறுவனங்களும் நடத்துகின்ற பயிற்சி வகுப்புகள், திட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக தனது அதிகாரிகளைத் தெரிந்தெடுத்து இம்மாநில அரசு அனுப்பி வைக்கிறது.

2. மேலும், இந்திய பொது நிர்வாக கழகத்தில் உறுப்பினராக வுள்ள மாநில அரசுப் பணியாளர்களின் சம்பளம் திங்களுக்கு ரூபாய் 1,200-க்குக் (சிறப்புச் சம்பளம் நீங்கலாக) குறைவாக இருந்தால் அவர்களுடைய உறுப்பினர் கட்டணத்தில் பாதியான ரூபாய் 2,000-ஐ மானியமாக மாநில அரசு செலுத்துகிறது.

3. அதற்கிணங்க, புதுடில்லியிலுள்ள இந்திய பொது நிர்வாகக் கழகத்திற்கு மானியமாக வழங்க ரூ. 3,000 நிதி ஒதுக்கீடும், புதுடில்லியிலுள்ள இந்தியப் பயிற்சி மேம்பாட்டுச் சங்கத்திற்கு ரூ. 1,000 நிதி ஒதுக்கீடும் 1978-79-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பெற்றுள்ளன.

4. இவை தவிர, மேற்சொன்ன நிறுவனங்கள் நீங்கலாக வேறு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குவது தொடர்பாக, செலவு செய்ய வேண்டியிருப்பின் செலவினைப் பற்றெழுத மாநில அரசுக்கு இயலும் பொருட்டு, ''AK. ஏனைய பயிற்சி மானியங்கள்'' என்னும் தலைப்பின்கீழ் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 அக் 1978
MADRAS